BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# சீதையின் மேன்மை குணங்கள்

# Seethiyin Meanmai kunangal

**இரா. சங்கீதா**

பெரியார் பல்கலைக்கழக பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

ஸ்ரீ சாரதா மகளிர்கல்லூரி (தன்னாட்சி) , சேலம்- 16, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் சா. பூங்கொடி**

உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீசாரதா மகளிர்கல்லூரி(தன்னாட்சி), சேலம்- 16.

**R. Sangeetha**

Periyar University Parttime Ph.D. Research Scholar, PG and Research Department of Tamil,

Sri Sarada College for Women (A), Salem- 16, Tamil Nadu, India. Email: vrssangeetha@gmail.com.

**Dr. S.Poongodi**

Assistant Professor, PG and Research Department of Tamil, Sri Sarada College for Women (A), Salem- 16,

Tamil Nadu, India. Email: poonganathan@gmail.com.

**Abstract**

An epic is a long, continuous poetic literary form. It elaborately portrays the life of a hero and the social and historical events of the time within the four fundamental aims of life-virtue, wealth, pleasure, and liberation. An epic is a narrative work composed by poets who preserve ancient traditions. In this sense, the Kambaramayanam stands as Kambar's unique and great epic. It is an artistic treasure that reveals the depth of the Tamil language, the greatness of Tamil culture, and the philosophies of life. By portraying Rama as the hero who steadfastly upholds love, valor, duty, and sacrifice without wavering under any circumstance, and Sita as the heroine, Kambar has rendered the Kambaramayanam a distinguished and exemplary epic. The credit for creating vivid characters and expressing the ways of life they exemplify through appropriate and refined diction belongs solely to Kambar. Among such character portrayals, this article aims to examine the noble qualities of Sita. A woman's true greatness lies in her ability to uphold virtues such as love, compassion, sacrifice, and patience without deviating from her cultural values, and in maintaining these qualities consistently in all circumstances of life. By embodying and practicing such virtues, Sita, the heroine of the epic, elevates herself to a position of moral excellence. This article seeks to explore how Sita establishes her greatness through these noble qualities.

**Key words**: Epic, Creation, Treasury, Tolerance, Culture.

**ஆய்வுச்சுருக்கம்**

காப்பியம் என்பது ஒரு நீண்ட தொடர்நிலை செய்யுள் இலக்கிய வடிவமாகும். ஒரு தலைவனின் வாழ்க்கையையும், அக்கால சமூக வரலாற்று நிகழ்வுகளை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதி பொருட்களுக்குள் விரிவாக பேசும். காப்பியம் என்பது பழமரபுகளைக்காக்கும் கவிஞர்களால் இயற்றப்பட்ட கதை வடிவமான படைப்பாகும். அவ்வகையில் கம்பராமாயணம் கம்பரின் தனி பெரும் காப்பியம் ஆகும். தமிழ் மொழியின் ஆழத்தையும் தமிழர் பண்பாட்டின் பெருமைகளையும் வாழ்வின் தத்துவங்களையும் உணர்த்தும் கலை களஞ்சியமாகும். அன்பு, வீரம், கடமை, தியாகம் போன்றவற்றை எந்நிலை வருவீனம் தன்னிலை மாறாது பின்பற்றும் தலைவனாக ராமனையும் தலைவியாக சீதையும் படைத்து கம்பராமாயண காப்பியத்தை சிறப்புமிக்க காவியமாக படித்துள்ளார்கம்பர். கதை பாத்திரம் படைப்புகள் மற்றும் அவற்றின் வழி கூறும்

வாழ்வியல் முறைகள் ஆகியவற்றை அவ்வவற்றிற்கு உரிய சொற்களை இட்டு பாடிய பெருமை கம்பருக்கே உரியதாகும். அத்தகைய பாத்திரப்படைப்புகளில் ஒன்றான சீதையின் மேன்மை குணங்களை ஆராய்வதை கட்டுரை நோக்கமாகும். ஒரு பெண் தன் பண்பாட்டு சிறப்பு மாறாமல் அன்பு கருணை தியாகம் சகிப்புத்தன்மை போன்ற குணங்களை தன்னுல் கொண்டு தன் வாழ்வின் அனைத்து சு+ழ்நிலையிலும் தன்மை மாறாத கடைபிடிக்கும் தன்மையே சிறந்த மேன்மையுடையதாகிறது. அத்தகைய குண நலன்களை பின்பற்றி கதையின் தலைவி சீதை தன்னை மேன்மையுறச் செய்கிறாள் என்பதை கட்டுரையில் ஆராய்வோம்.

**திறவுச்சொற்கள்** : ஆவணம், மண்பாண்டம், விருந்தோம்பல், கலாச்சாரம், நாயன்மார்கள்

**முன்னுரை**

இராமாயணத்தின் தலைவியான சீதை பொறுமை, அன்பு, தாய்மை, அர்ப்பணிப்பு மற்றும் கற்பு திறன் போன்ற குணங்களை தாங்கி பெண்மையின் இலக்கணமாக திகழ்கிறாள். அமைதியான சுபாவம் கொண்டவளாக இருந்தாலும் இக்கட்டான தோழர்களைக் கூட அமைதியாலும், பொறுமையாலும், தைரியத்தினாலும் எதிர்கொள்கிறாள். நிலத்தின் மகனான சீதை வனவாசம் மற்றும் அக்னி பிரவேசம் போன்ற சோதனைகளை எதிர்கொண்ட போதும் அவளின் சகிப்புத்தன்மையை வெளிப்பட்டது. தன்னை துன்புறுத்திய அறக்கிகளிடம் கூட அவர்காட்டிய மன்னிப்பு மென்மை குலத்திற்கு சான்றாகும். ராமனின் மீதான சீதையின் அன்பு அரண்மனை சுகங்களை விட கணவருடன் கானகம் செல்வதையே மேன்மையாக கருதி மென்மையான பாதங்கள் கல்லும் முள்ளும் பட கானகம் புகுந்தாள். சீதையின் வாழ்க்கை ஒரு பெண் எத்தகைய கடினமான சூழலிலும் தனது மென்மை, ஒழுக்கம், மன உறுதி ஆகியவற்றை காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த சான்றாக உள்ளதை இவ்வியலில் காண்போம்.

**தாய்மை பண்பு**

இராமனைப் பற்றி உரைத்திட்ட அனுமனின் உரையினால், இன்ப மனம் வெற்றியில் மகிழ்ந்தாலும் அந்தச் செய்தியைத் தெரிவித்த அனுமனை நோக்கி,

> *"உலகம் மூன்றும் உதவற்கு ஒரு தனி*
> *விலை இலாததும் உன்னினென் மேலவை*
> *நிலை இல்லாமை நினைந்தனென் நின்னைஎன்*
> *தலையினால் தொழவும் தகும் தன்மையோய்"*[1]

என்ற பாடலில் சீதை அடிமனதில் பூத்த அளப்பரிய அன்பில் நன்மொழி பேசுகிறாள். 'விலைமதிப்பற்ற நன்மொழி பேசுபவர்களுக்கு, ஏதேனும் விலையானது மதிப்பிடக்கூடிய ஒரு பொருளைக் கொடுப்பது

அனுமனை நினைத்து மேலும் அவள் அனுமனை நினைத்து உன்னை வணங்கவே மனம் நினைக்கிறது என்ற இதனை அவள் வெளிப்படையாக இதனை கூறாமல் மனத்தினால் வணக்கம் செலுத்தி மகிழும் சீதையின் பண்பாடானது கற்போரைச் சிந்திக்க வைக்கிறது. இதனை அடுத்து. சீதையின் அருளுள்ளம் பற்றி காணலாம்.

**அருள் உள்ளம்**

சீதையினுடைய குணங்களில் தலையாயது அருள். திருக்குறள் ஆசிரியர்"அன்பு ஈனும் குழவி" என்பர். அன்பு முதிர்ச்சி அருளாக வெளிப்படுகிறது. சீதை ஓர் அரச குமாரி. அன்பாலும், அருளாலும், தவத்தாலும் சிறந்த சனகனின் மகள், பிறப்பிற்கும், வளர்ப்புக்கும் ஏற்ற பெரும் குணங்களால் நிறைந்தவள். இராமன் அசோக வனத்தில் கொடுத்த அடையாளமான கணையாழியை மோதிரத்தைச் சீதையிடம் அடையாளமாக அதனை கண்ட அனுமன் கொடுத்தான். அதனை கண்ட சீதை பெற்ற மகிழ்ச்சிக்கு இல்லை.

அவளின் நிலை வாழ்நாளில் தம் குறிக்கோளை நிறைவேற பெற்ற ஒருவர்மகிழ்ச்சியில் திளைத்தது போன்று இருந்தது என்று கம்பர்வருணித்துள்ளார். மறுமைப் பயனை இப்பிறவியிலேயே அடைந்தவள் போல் காணப்பட்டாள். விலை மதிப்புடைய ஒரு பொருளை தவறவிட்டுப் பிள்ளர்அதனைத் தேடி கிடைக்கப் பெறாதவர்கள் துன்புற்ற நிலையில் அவை கிடைக்கப் பெற்றால் எவ்வாறு இருக்குமோ அப்படி உவகை பெற்றாள். கணவனைப் பிரிந்து வாழ்தல் பெண்களுக்கு அழகு அல்ல என்பதையும், அது சமுதாயம் சார்ந்த மரபு என்பதும் கணவனுக்காக தண்ணீரும் தன் வீரத்தை விட்டுக் கொடுப்பதை பெருமையாக போற்றும் குணம்

அன்பு கொண்டொழுகும் பெண்களுக்கு அதுவே அழகாகும் என்பதை அந்த வகையில் தனிமையில் சிறை வைக்கப்பட்ட போதும் தன் நிலை மாறாது அருளுடன் அன்பு கணவன் இராமனுக்காக சீதை காத்திருப்பது சீதையின் பொறுமைக் காண பண்பாக போற்றப்படுகிறது.

**பெண்மைக்கு அணிகலன்**

மறுநாள் காலை வேளையிலே இராமனுக்கு முடிசூட்டு விழா நிகழவிருப்பதைக் கேள்வியுற்று சீதை மகிழ்ச்சி கொண்டாள். ஆனால் கைகேயியின் மனமாற்றத்தின் விளைவாக அனைத்தும் தலைகீழாக மாறின. கைகேயி இராமனை அழைத்து ஆட்சி உனக்கு அல்ல உன் தம்பி பரதனுக்கே என்று உரைத்தாள். அதற்கு இராமன் எவ்வித சீற்றமும் கொள்ளாமல், கைகேயியின் உரையைக் கேட்ட இராமனின் முகமலர்ச்சி முன்பு இருந்ததைக் காட்டிலும் மும்மடங்காகப் பொலிந்தது. அவனின் மன வலிமை சீதைக்கு வியப்பினைத் தந்தது. எவ்வளவு பெரிய நற்குணம், உணக்கிறாள என்று அவனிடமுள்ள உறுதியை நினைத்து சீதை மனம் உணர்கிறாள்.

*“தெம் மடங்கிய சேண் நிலம் கேகயர்*
*தம்மடந்தை உன் தம்பியர்ஆமென*
*மும் மடங்கு பொலிந்த முகத்தின்*
*வெம்மடங்கலை உன்னி வெதும்பினாள்”*[2]

பிறவற்றைவிட இராமனின் ஏகபத்தினி விரதத்தின் மகிமையை கூறும் இராமாயணம் சீதையின் சிறப்புமிக்க கற்பு திறத்தின் மேன்மையை எடுத்துரைக்க தவறவில்லை. இதனாலேயே சீதை பிராட்டியை இலக்குமி, சானகி என்றெல்லாம் அழைக்கப்படும் பெருமைக்குக் காரணம் அவ்வகைகளில் எல்லாம் சிறப்பு மிக்கவளாய்த் திகழும் காரணத்தினாலேயே அந்த சீதை பெண்மைக்கு ஓர்அணிகலனாய் திகழ்கிறாள்.

**தலைமைப்பண்பு**

மக்களுக்குரிய வாழ்க்கை இலக்கணத்தைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். வாழ்க்கை துணை என்று அவர் குறிப்பிடுகிற,

*“மனத்தக்க மாண்புடையவள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கை துணை”*[3]

மனிதனுக்கு வாழ்க்கைத்துணை பெண் ஒருத்தி. அவளுக்குத் துணை அவன், தலைமை பற்றி ஆடவன் பேரில் வைத்து, திருவள்ளுவர் இல்வாழ்வை நடத்துவோன் ஆடவனாகவும், அவனுக்குத் துணைப் பெண் எனவும் குறிக்கிறார். இந்த தலைமைப் பண்பான இல்லறம் சீதையிடத்து அமைந்திருக்கிறது. அதுமட்டும் அல்லாமல் பிறப்பு, குடிமை, ஆண்மை, உருவு, ஆண்டு சீதையின் பண்பினை விளக்குவதில் பிறப்பு முதல் அவதரித்த நோக்கம் முடியும் வரை கம்பர் விளக்கிக் காட்டியுள்ளதை கம்பராமாயணத்தில் அறிய முடிகிறது.

**பிறப்பு**

இந்தத் தலைமக்களுடைய ஒப்புமையின் நலன் வியக்கத்தக்கது. பிறப்பினால் இருவரும் ஒற்றுமையுடன் காணப்படுகின்றனர். இராமன் யாகக் குண்டலத்தில் தோன்றிய அமிர்தமே கருவாகக் கோசலை வயிற்றில் வளர்ந்தவன். அதுபோலவே, சீதை வேள்வி நடத்துவதற்காக சனகன் பொன்னேர்பூட்டி உழுதபோது அந்நிலத்தில் சனக மன்னனுக்கு கிடைத்தவள். எனவே இருவருக்கும் இடையே பிறப்பிலும் ஒற்றுமைப் பண்புகள் உள்ளதை இதனால் அறியமுடிகிறது.

**குடிமை**

குடிமை என்பது பற்றிப் பார்க்கும்போது இருவரும் அரசக் குடும்பத்து மக்கள். எனவே குடிமையும் பண்பை விளக்க முற்படுகிறதெனலாம்.

**ஆளுமை**

ஆளுமை என்பது கையாளும் திறன்ஆகும். உடல் வலிமை, செயலைச் செய்துமுடிக்கும் திறமை முதலியவற்றை இந்த சொல் குறிக்கும். வீரம், வெற்றி, மன முயற்சி, வாய்மை ஆகியவற்றையும் இச்சொல் குறிக்கும். இராமன் சீதை ஆகிய இருவருக்கும் இச்சொல் வாய்க்கப் பெற்றிருப்பதை நாம் ஆங்காங்கே காணலாம். சிறந்ம பண்பை நிலைநிறுத்துவதில் பொறுமையும் வீரமும் ஒருவகை என்கிறது கம்பராமாயணம்.

**சீதையின் இன்லற மாண்பு**

சீதை தன்னுடைய கணவன்மேல் கொண்டிருந்த காதலை அளவிட முடியாது.அவள் பேசும் பள்ளியறையிலோ, தனித்தோ உரையாடும் இடங்கள் காணப்படுவதில்லை. சுருங்கப் பேசும் இந்த இயல்பை உடையவளாய் திகழ்கிறாள் சீதை.

பிரிவினும் சுடுமோ பெரும்காடு என்கிறபோது அவள் தேக்கி வைத்திருந்த அந்தக் காதல் உணர்வு நெருப்புப்பொறி பட்ட அதே நேரத்தில் பற்றிக் குவியலென விழுகின்ற

தீச்சுடரைப் போல் வெப்பத்தைக் கக்குகின்றன. எங்குலும் மூசீதை சாத்திரங்களை மேற்கோளாகக் காட்டுகிறாள். கல்வி. கேள்விஞானம் பெற்றவள். தான் பத்தினி விரதம் மேற்கொண்டு தர்மத்தைப் பற்றிக் கொண்டு, பக்தி சிரத்தையுடன் கடைபிடிப்பதை உதாரணமாக காட்டி வாதாடுவதைக் காப்பியத்தில் காணமுடிகிறது. இராமனைப் பிரிவதைக் காட்டிலும் உயிர்விடுவதுமேல் என்று கூறுகிறாள்.

"சீதையை காட்டிற்கு என்னுடன் வா என்று இராமன் அழைத்திருந்தால் இராமனுடைய இச்சைக்கு இசைந்தே சென்றால் என்றாகிவிடும். சீதை தானே தீவிரமாகச் சென்றால் என்னும் கருத்து இல்லாது சீதையின் மேன்மையும் வெளிப்பட்டிருக்காது. ஆகவே இராமன் முதலில் தன்னை தாழ்த்திக் கொண்டதற்குச் சீதையின் தனித்தன்மையைக் காட்டுவதற்கேயாகும்". "மரவுரி தரிக்காத அக்காலத்திலேயே கணவனுக்காகத் தன்னிலையையும் சமமாக பாவித்துக் கொண்டு சீதை மரவுரி தரித்தாள். இராமன் தந்தையின் வாக்கை ஏற்று போகிறான். ஆனால் சீதையின் தியாகம் மிகப்பெரியது. இது சீதையின் பண்புக்கு ஒரு சான்றாகும். வசிட்டர்மனங்கசிந்து இராமனுக்குப் பதிலாக ஆட்சியை ஏற்குமாறு கூறியும் மறுத்துவிடுகிறாள். வசிட்டர்அயோத்தி சிம்மாசனம் கொடுத்தும் சீதை விரும்பிய ஒரே சிம்மாசனம் இராமனோடு இணைந்திருப்பதே"

மேற்கண்ட கருத்திற்கு ஏற்றவாறு குறுந்தொகை பாலைத்திணை பாடலில் பெருங்கடுங்கோ கூறப்பட்ட செய்திகள் இவ்விடத்தில் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

*"உமணர்சேர்ந்து கழிந்தமருங்கின் அகன்றலை*
*ஊர்பாழ்த்தன்ன ஓமையம் பெருங்காடு*
*இன்னா என்றி ராயின்*
*இனியவோபெரும தமியோர்க்கு மனையே"[4]*

என்ற பாடலில் 'இனியவோ பெரும தமியோர்க் மனையே' என்றதால் வினையின் பொருட்டு செல்லும் தலைவன் தலைவியை உடன் அழைத்துச் சென்றால் காட்டின் வெம்மை அவளுக்குத் துயர்தரும் என்று இல்லத்தில் இருக்குமாறு கூறியதற்குத் தலைவி வருந்துகிறாள். தலைவன் கூற்றிற்கு தலைவி தலைவனைப் பிரிந்து வாழ்தல் தனக்கு பிரிவென்னும் துன்பம் தருவது தாங்குவதற்கு இயலாதது என்று தலைவி காதற்கு சுவைர்தனது தோழிக்கு எடுத்துரைக்கும் பாடலாக இடம்பெற்றுள்ளதை போன்றே கம்பராமாயணத்தில் இராமன் சீதைக்கு அயோத்தியில் இருக்குமாறு கூறியபோதும் சீதையை இராமன் பிரிவுக்கு வருந்துவதும் ஒன்றுபட்ட நிலையில் இங்கு ஒப்பிட்டு சீதையின் பண்பு நிலைகளை குறித்து பின்வருமாறு பல்வேறு கோணங்களில் இன்னும் காணலாம்.

சீதை அனுமனிடம் நான் இருக்குமிடம் ராமனுக்குத் தெரிந்துவிட்டதால் இனி நான் காத்திருக்க மாட்டேன். ஒரு மாதத்திற்குள்ளாக என்னை மீட்டுச் செல்லும்படி சொல் இல்லையென்றால் கங்கை ஆற்றங்கரையில் எனக்கு இறுதிக்கடன் செய்துவிடச் சொல் என்கிறாள். இனி, கற்புடைய மாதருக்கு ஒரு மன உறுதிப்பாடு உண்டு. ஆகையால்.

*"அணிற்பல் அன்னக் கொங்குமுதிர்முண்டகத்து*
*மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப*
*இம்மை மாறி மறுமை ஆயினும்*
*நீ ஆகியர்எம் கணவனை*
*யானாகியர்நின் நெஞ்சு நேர்பவளே"[5]*

இந்தப் பிறவி மட்டுமல்ல எப்பிறவி வந்தாலும் இராமனே என்னுடைய கணவனாக இருக்கவேண்டும் என்கிறாள் சீதை. தலைவன் தலைவியரின் அன்புடைமையானது பிறவிதோறும் தொடரும் என்பது இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

சீதை தனது கற்பக களங்கம் ஏற்படாது இராமனுக்கு உரிய பத்தினியாகவும் வாழ்ந்து வருகிறாள். தனது கருப்பு நிறத்தை நிரூபிக்கும் வகையில் அவரது உரை அமைந்திருப்பதை பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

*"அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ*
*எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்*
*சொல்லினால் சுடுவேன் அது தூயவன்*
*வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்"[6]*

இப்பாடல் சீதையினுடைய அளப்பரிய கற்பாற்றலை வெளிப்படுத்தி அவளுடைய தன்னம்பிக்கையை விளக்கி நிற்கிறது. சீதை தனது சொல்லின் ஆற்றலைப் பயன்படுத்தி இராவணனை அழித்துவிட்டு, இலங்கையையும் அரக்கர்களையும் கற்புத்தீயால் சுட்டெரிக்க முடியும். என்னை இராவணன் தீண்டவில்லை, தீண்டியிருந்திருந்தால் அவன் இந்நேரம் உயிர் வாழ்ந்திருக்க மாட்டான் அதற்கு அஞ்சியே என்னைப் பர்ண சாலையோடு அகழ்ந்தெடுத்து இங்கு கொண்டு வந்திருக்கிறான் என்றாள்.

தொல்காப்பியத்தில் தலைவியின் பெருமையையும் உரிமையையும் பேசவந்த தொல்காப்பியர்,

*“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்*
*மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்து புறந்தருதலும் சுற்றமும் ஓம்பலும் பிறவும்”7*

எனத் தலைவியின் பண்புகளாகக் குறிப்பிட்டுள்ளார். குடும்பத் தலைவியாக அமைபவள் தன்னையும் தன்றைத் துணையாக நம்பி மணம் செய்துகொண்ட தலைவனையும் மேம்ப தன்மையுடைய பண்பாலும், அறிவாற்றலாலும் காப்பாற்றக் கூடிய திறன் படைத்தவளாக விளங்க வேண்டும்.

சீதையைக் கண்ட அனுமன் இராமனிடம்,

*“உன்பெருந்தேவி என்னும் உரிமைக்குக்கும்*
*உன்னைப் பெற்ற*
*மன்பெருமருகி என்னும்*
*வாய்மைக்கும் மிதிலை மன்னன்*
*தன்பெருந்தனயை என்னும்*
*தகைமைக்கும் தலைமை சான்றாள்”8*

என்ற பாடலில் சீதையின் பண்பினையும் கற்பொழுக்கத்தின் சிறப்பினையும் சொல்லின் செல்வனின் வாக்கினால் கம்பன் எடுத்துரைக்கின்றார். அசோக வனத்தில் சீதையின் நிலையைக் கண்ட அனுமன் அவளது தோற்றத்தைக் கொண்டே அவளது கற்புத் திறத்தைப் பேசும் அனுமன்,

*“தேவுதென் கடல் அமிழ்து கொண்டு அனங்கவேல் செய்த*
*ஓவியம் புகை உண்டதே ஒக்கின்ற உறுவாள்”9*

அசோக வனத்தில் சீதையின் கற்புத்தன்மை குறையாமல் ஓர்அணங்குபோல் காட்சியளித்ததை இராமனிடம் அனுமன் கூறினான். இராமனை நேரில் கண்டபோது அனுமன்.

*“கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்”10*

என்று இராமனின் எதிர்பார்ப்பு ஏற்ற விளக்கத்தைத் தந்து இராமனை உயிர்ப்பித்தான். சீதையின் கற்பொழுக்கத்தை உணர்வு பூர்வமாகவும், உருக்கத்துடனும் அனுமன் வாயிலாக எடுத்துரைக்கும் கம்பர்,

*“விற்பெருந் தடத்தோள் வீர!*
*வீங்கு நீல் இலங்கை வெற்பில்*
*நற்பெருந் தவத்தளாய நங்கையைக்*
*கண்டேன் அல்லேன்*
*இற்பிறப்பு என்பதொன்றும்*
*இரும்பொறை என்பதொன்றும்*
*கற்பெனும் பெயரது ஒன்றும்*
*களிநடம் புரியக் கண்டேன்”11*

என்னும் பாடலில் சீதையின் கற்புத் திறத்தின் சிறப்பைத் தெளிவாகச் சுட்டியுள்ளான். இவ்வாறாகக் கற்பெனும் உயரிய ஒழுக்க மேம்பாட்டை, மனிதத்தின் சிறந்த பண்பை, காவியத் தலைவியை அடிப்படையாகக் கொண்டு பேசுவதைக் கம்பராமாயணம் உணர்த்துகிறது.

இராவணன் அழிவதற்குப் கொண்ட பிராட்டியின்மீது அவனது தகாத காம இச்சை காரணமென்பதையும் இதற்கு முழுமுதல் காரணம் சீதை என்பதையும் உணர்ந்தவள் மண்டோதரி. தம்முடைய விருப்பம் இல்லாமல் தமது மனத்தில் இன்னொருவர்நுழைய முடியாது எனும் மன உறுதியாகிய கற்பின் விளக்கமாகச் சீதை விளங்குகிறாள் இதனை மேற்கண்ட சான்றுகள் விளக்கி நிற்கின்றன.

இராவணன் பிராட்டி தனக்கு இணங்கினால் இலங்கையைச் சனகனுக்குக் கொடுத்து. ஆளச்செய்கிறேன் எனக் கூறினான். தேவர்களும் உன் தந்தையான சனகனுடைய பாதங்களுக்குப் பணி செய்வர.; நீ சனகன் மகளாகப் பிறந்ததினால் உண்டான பயன் பழுதாகாமல் மூன்று உலகங்களையும் ஆட்சி புரியும் செல்வங்கள் அனைத்தையும் இந்தச் சனகனுக்கு கொடுத்து நீ மகளாகப் பிறந்த பயனை முடிப்பாயாக என்று கூறி முடித்தான்

இராவணன் கூறியதைக் கேட்ட சீதை சினம் கொண்டு பின்வருமாறு பதிலுரைக்கின்றாள். மூவுலகச் செல்வங்கள் அனைத்தையும் பெற்று வாழப்போகிறவன் இந்திரனே அன்றி! நீ இல்லை எனவும் கூறினாள். இலங்கையையும் உங்களது செல்வத்தையும் பெறப்போகிறவன் வீடணன்எனக் கூறினாள். உன் மார்பில் சேர்வதற்கு உரியவை இராமனிடமுள்ள அம்புகளே என்றும் கூறி என் தலையின்மீது வைக்கத் தக்கவை இராமனின் திருவடிகளே என்றாள்.

*“இத்திரு பெறுகிற்பானும் இந்திரன் இலங்கை நுங்கள்*
*பொய்த்திரு பெறுகிற்பானும்வீடணன் புலவர்கோமான்*
*கைத்திருச் சரங்கள் உன்தன்மார்பிடைக்கலக்கற்பால*
*மைத்திருநிறத்தான் தாள் என் தலைமிசைவைக்கற்பால”12*

இராமனது திருப்பெயர்பொறிக்கப்பட்ட அம்புகள் உன் மார்பைத் துளைப்பது உறுதி அற்பனே எம்முடைய தாயான சுபத்திரையின் மைந்தனான

இலக்குவன் உனது மைந்தனான இந்திரசித்துவின் உயிரை அவனது அம்பு பட்டு அழிக்கப்போவதும் உறுதி. அந்நிலையில் அவனது உடலை நாய் தனது நாவினால் நக்கும்போது,எனது மகன் இறந்துவிட்டான் என்று நீ குரல் உயர்த்தி கதறப்போவதும் உறுதி என்றிவ்வாறு கூறிய பிராட்டியின் கோபத்தால் அவளது கற்புதிறன் மேம்பட்டு நிற்கிறது.

"புன்மககேட்டி கேட்டற்கு இனியன புகுந்த போரில்
உன்மகன் உயிரை எம்மோய்சுமத்திரை உய்ய ஈன்ற
நன்மகன் வாளி நக்க அவன் உடலை நக்க
என்மகன் இறந்தான் நீ எடுத்து அரற்றல் என்றாள்"[13]

அனுமனைப் பார்த்துச் சீதை நீ இங்கிருந்து நான் கொடுக்கும் சூடாமணியை கொண்டு சென்று இராமனிடம் கொடு, இந்த இலங்கை மட்டுமல்ல உலகம் முழுவதையும் நெருப்பு கொழுந்துவிட எரிக்க என்னால் முடியும் அந்த ஆற்றல் எனக்குண்டு என்கிறாள் பிராட்டி. அவ்வாறு செய்தால் "இராமனது கோதண்டம், வெறும் தண்டம்" என்று அந்த மனிதருக்கு விட்டுவைத்துள்ளேன் என்றாளாம். ஆண் பிள்ளைக்கு என்னால் இழிவு வந்துவிடுமல்லவா என்று கூறுவதும் நினைவு கூறத்தக்கது.

**முடிவுரை**

கம்பராமாயணத்தின் தலைவி சீதை அற்புத குணங்களின் இலக்கணமாக திகழ்கிறாள். கணவர்மீது மாறாத அன்பு, விசுவாசம், கற்பு நெறி ஆகியவற்றை கொண்டவளாக கம்பரால் படைக்கப்பட்டுள்ளார். இராவணனின் சிறையில் இருந்த போதும் அவனது இனி சொற்களுக்கு இணங்காமல் மன உறுதியுடன் இருக்கிறாள். வனவாசத்தின் போதும் அக்னி பரிட்சையின் போதும் வேதனை அடைந்தோம் அவற்றை தியாக உணர்வுடன் ஏற்கிறாள். உயிர்களிடம் கருணை கொண்டவராக தனது கடமையில் உறுதுணையாக காணப்படுகிறாள். இராமனின் தர்மநிலை நாட்டம் பணியில் அவனது செயல்களுக்கு துணை நின்று தனது பங்களிப்பை செய்தவளாகிறாள். இந்திய பண்பாட்டில் பெண்களின் ஒழுக்கம், பொறுமை, தியாகம் மற்றும் மனவலிமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் சீதை விளங்குவதை இந்த ஆய்வின் மூலம் நன்கு உணர முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1.இரா. செல்வகணபதி, கம்பனில் பெண்ணியம், ப.95.

2. ச. சிவகாமி, கம்பன் ஆய்வடங்கல்,ப.188.

3. மேலது 51

4. சௌரிப்பெருமாள் அரங்கன் - குறு. மூ. உ, குறு பாலை, பா-124.

5. வி. நாகராசன், குறு. மூ. உ, பகுதி-1.ப.129

6. பூவண்ணன், சு.கா, ப.242.

7.முனைவர் ச. வே. சுப்பிரமணியன், தொல்.பொருள், பா. 1098.

8. கா. வாசுதேவன், கம்பனியம்.ப.227.

9. மேலது, 229

10. எஸ். என். குப்புசாமி, கம்பனே போற்றி, ப.13.

11. எஸ். என். குப்புசாமி, கம்பனே போற்றி, ப.14.

12. பூவண்ணன். சு.கா, ப.30.

13. மேலது, ப.32

**துணை நூற்பட்டியல்**

1. அழகிரிசாமி. கு, கம்பராமாயணம் சுந்தரகாண்டம், தமிழ் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-05, முதல்பதிப்பு - ஜூலை, 1965.
2. ஆதித்தன். அ. கு, கம்பர் கவிநயம் வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17, முதல் பதிப்பு - பிப்ரவரி, 1974
3. இஸ்மாயில். எம். எம்., கம்பன்கண்ட இராமன், வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17, முதல் பதிப்பு-14.3.76
4. ஏழுமலை. எம். ஆர்., கம்பனில் பார்வைச் செய்திகள், தி பார்க்கர், 293, அகமது வணிகவளாகம், இரண்டாவது தளம், இராயப்பேட்டை, சென்னை-600014, முதல் பதிப்பு-ஜனவரி, 2008
5. கமலாசங்கரன், கம்பனும் குறளும், கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை தியாகராய நகர், சென்னை – 600017, முதற் பதிப்பு - 2001.

6. கோபால கிருஷ்ணமாச்சாரியார். வை.மு., (உரை), கம்பராமாயணம்- பாலகாண்டம், 171. (புதியது. 18) உமா பதிப்பகம், பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை - 600001. முதல் பதிப்பு - ஏப்ரல், 2006
7. சதாசிவம். மு., கம்பனின் வைரவரிகள், மணிவாசகர்பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை -18, ஆகஸ்ட், 2005
8. சதாசிவம். மு., கம்பன் வழங்கும் மோனை இன்பம், மீரா நிலையம், 7, வள்ளியம்மை இரண்டாம் தெரு, பெரிய வலசு – 638004
9. சுப்பிரமணியன். ச. வே., கம்பன் கவிநயம், தொகுதி-2 மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600108, முதல் பதிப்பு - டிசம்பர், 2013
10. வை.மு.கோ (உ.ஆ), கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம்,. 171, (புதியது. 18) உமா பதிப்பகம், பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை – 600001, முதல் பதிப்பு - ஏப்ரல், 2006